(2) அரசினர் சீர்திருத்தப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளவர்களுக்கு பள்ளிகளில் கீழ்க்காணும் வாழ்க்கைத் தொழில் பாடங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது :—

(1) தையல்.

(2) நெசவு.

(3) பாய்முடைதல்.

(4) தச்சு.

(5) கருமார் தொழில்.

(6) புத்தகம் கட்டுதல்.

(7) உலோகத்தொழில்.

(8) கட்டிடம் கட்டுதல்.

(9) வேளாண்மை-தோட்டத் தொழில்.

(10) பூத்தையல் வேலை, பின்னல் வேலை.

(11) மாணவர்கள் சீர்திருத்தப் பள்ளியில் பாண்டு இசை உட்பட இசை.

(12) கோழி வளர்ப்பு.

THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, the trades mentioned by the Hon. Minister are all old-fashioned and outmoded and not suited to the modern industrial age. Will the Government try to introduce training in electric-wiring, motor mechanism, radio mechanism and some such modern techniques which will help them in this modern industrial age?

THE HON. THIRU S. MADHAVAN : It is a good suggestion.

Tamil Nadu Small Industries Development Corporation

* 97. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the names of Chairmen of the Tamil Nadu Small Industries Development Corporation during the years 1967 to 1973; and

(*b*) the period for which each of them occupied the post?

1973 நவம்பர் 24]

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1967 முதல் 1973 வரையில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர்களாக இருந்தவர்கள் யார் யார்?

(இ) அவர்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு காலத்திற்கு அப்பதவியை வகித்து வந்தனர்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) 1-5-70-ம் ஆண்டு அமைக்கப் பட்ட தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைமைப் பொறுப் பேற்ற அலுவலர்களின் பெயர்களும் அவர்கள் பதவி வகித்த காலங்களும் பின் வருமாறு :—

திரு. சி. ஜி. ரங்கபாஷ்யம், ஐ.ஏ.எஸ்., 1-5-70 லிருந்து 14-4-71 முடிய;

திரு. ஏ. பத்மநாபன், ஐ.ஏ.எஸ்., 26-5-71 லிருந்து 26-5-72 முடிய;

திரு. ஆர். நடராஜன், ஐ.ஏ.எஸ்., 26-5-72 லிருந்து 29-1-73 முடிய;

திரு. சி. என். ராகவன், ஐ.ஏ.எஸ்., 29-1-73 லிருந்து பொறுப்பேற்றுள் ளார்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, கடந்த மூன்று ஆண்டுகளிலே திரு. ரங்கபாஷ்யம், திரு. பத்மநாபன், திரு. நடராஜன், திரு. ராகவன் ஆகிய அதிகாரிகள், ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக் கிறார்கள். தொழில் துறை என்பது ஒருவர் நீண்டகாலம் பணி புரிந்து செயல் பட வேண்டிய ஒன்றாகும். இந்த அதிகாரிகளை ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொருவராக மாற்றிக் கொண்டிருந்தால், அவர்கள் எப்படி நல்ல முறையில் தொழில் துறையை வளர்ப்பதற்குத் துணையாக இருப்பார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, தொழில் துறையிலே அனுபவம் பெற்றவர்கள் தொடர்ந்து பல ஆண்டுகள் பணியாற்றுவதற்கு வாய்ப்பு, வசதி ஏற்பட வேண்டுமென்ற கருத்தை ஆதரிக்கிறேன். ஏற்கெனவே இந்த மன்றத்தில் திரு. சுவாமிநாதன் அவர்களுக்கு விளக்கியிருக்கிறேன். ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் போடும்போது, இந்தப் பிரச்சினை வருகிறது. அவர் களுடைய கேடர் மாறுமானால், செக்ரடரியாகவோ அல்லது மத்திய அரசில் அடிஷனல் செக்ரடரியாகவோ மாறுவதால், இப்படித் தொல்லைகள் ஏற்படு கின்றன.